கொடைக்கானல் மாவட்ட வன அலுவலரின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் திரு.எஸ்.பிரபு, இ.வ.ப.,
மாவட்ட வன அலுவலர் (ம) வனஉயிரின காப்பாளர் (கூ/பொ)

செ.மு.எண். ப3/4598/2020 நாள். .11.2021

பொருள்– பணி – நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெற்ற தேர்வில் (தொகுதி–IV) (2018 – 2019 மற்றும் 2019 – 2020) திரு.சு.ஆனந்த ஜோதி இளநிலை உதவியாளராக தேரிவு செய்யப்பட்டது – இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தது – பணியினை வரன்முறைப்படுத்துவது – தொடர்பாக.

பார்வை–
1) செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்,2373/பி,எஸ்.டி.எ/2020 நாள்.30.05.2020.
2) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் துறைத்தலைவர் சென்னை அவர்களின் ந.க.எண்.ண1/8511/2020 நாள். 27.07.2020.
3) தலைமை வனப்பாதுகாவலர், திண்டுக்கல் அவர்களின் ந.க.எண்.10476/2018/ப1 (ப.ஆ.எண்.35.2020.ப1) நாள்.07.08.2020.
4) மாவட்ட வன அலுவலர் மற்றும் வனஉயிரினகாப்பாளர் கொடைக்கானல் செ.மு.ஆ.எண்.4598/2020/ப3 நாள்.28.08.2020.
5) உதவி இயக்குநர் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அலுவலகம் திண்டுக்கல் ந.க.எண்.அ/000833/2019 நாள். .03.2019.

*********

திரு.சு.ஆனந்த ஜோதி இளநிலை உதவியாளர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி இளநிலை உதவியாளராகத் தேர்வு செய்யப்பட்டு பார்வை 2ல் கண்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கடிதத்தின் மூலம் இளநிலை உதவியாளராக திணடுக்கல் மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3–ல் காணும் தலைமை வனப்பாதுகாவலரின் பணியாணைப்படி கொடைக்கானல் கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து பார்வை 4–ல் காணும் மாவட்ட வன அலுவலர் செயல்முறை ஆணை கடிதத்தின்படி நேரடி இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டு 28.08.2020 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

திரு.சு.ஆனந்த ஜோதி இளநிலை உதவியாளரின் அரசுப்பணியானது பார்வை 2–ல் கண்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் அறிவுரைப்படி, பணியில் சேர்ந்த நாளான 28.08.2020 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்த ஆணை வழங்கப்பட்டது. தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள் சட்டம்) விதி 2016 பிரிவு 28(1)– ன்படி தகுதிகாண் பருவ காலம் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு திருப்பிகரமான பணிக்காலம் என அறிவிக்கப்படுகிறது. தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் நிலைய அடிப்படைப் பயிற்சி முடித்தல் வேண்டும்.

Scanned by CamScanner

மேற்படி பணிவரன்முறையானது (2018 – 2019 மற்றும் 2019 – 2020) (தொகுதி –IV) பணிகளின் நியமனம் குறித்து மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தின், சென்னை மற்றும் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டதாகும்.

15/11/21

மாவட்ட வன அலுவலர் (ம)
வனஉயிரின காப்பாளர்
கொடைக்கானல் வனக்கோட்டம்
கொடைக்கானல்

15/11/2021
15.11.21

பெறுநர்

திரு.சு.ஆனந்த ஜோதி இளநிலை உதவியாளர் மாவட்ட வன அலுவலகம், கொடைக்கானல்.

நகல் – பணிப்பதிவேட்டிற்கு
நகல் – தகுதிகாண் பதிவேட்டிற்கு
நகல் – உதிரி

Scanned by CamScanner